மாவட்ட உாிமையியல் நீதிமன்றம், போடிநாயக்கனூா்.
**முன்னிலை : திரு.A. சரவண செந்தில்குமாா், B.Com., B.L.,**
மாவட்ட உாிமையியல் நீதிபதி (FAC),
போடிநாயக்கனூா்.
திருவள்ளுவராண்டு 2053 சுபகிருது வருடம் காா்த்திகை மாதம் 07–ம்நாள்
2022 ஆம் ஆண்டு நவம்பா் மாதம் 23–ம் நாள் புதன்கிழமை.
IA.6/2021 in OS. No.99/2019.

Original Suit CNR No.TNTH12-000292-2019.

1. வரதராஜன்
2. திலகா்
3. சேதுராமன்
4. K.M. முருகேசன்
5. காமுத்தாய்
6. வரதராஜன் ... மனுதாரா்கள்/ வாதிகள்

// எதிா் //

1. வட்டாட்சியா், போடிநாயக்கனூா்.
2. வட்டார வளா்ச்சி அலுவலா், போடிநாயக்கனூா்.
3. கிராம ஊராட்சி தனி அலுவலா், உப்புக்கோட்டை.
4. கிராம நிா்வாக அதிகாாி, உப்புக்கோட்டை
5. மாவட்ட ஆட்சியா், தேனி. ... எதிா்மனுதாரா்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 09.04.2021–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 23.11.2022 ம்தேதி இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரா்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞா் திரு.R.S.வேல்முருகன் அவா்கள் ஆஜராகியும், எதிா்மனுதாரா்கள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞா் திரு.K.S.N.சிவமணி அவா்கள் ஆஜராகியும், இருதரப்பில் வாதங்கள் கேட்கப்பட்டு வழக்காவணங்கள் பாிசீலிக்கப்பட்டு இறுதி விசாரணைக்குப்பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும் ...

**உத்தரவு**

**1)** மனுதாரா்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள தஸ்தாவேஜ்களை எதிா்மனுதாரா்கள் நீதிமன்றத்தில் தாக்கல்செய்ய உத்தரவிடவேண்டி இம்மனு Under Order 11 Rule 14 CPC–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரா்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

**2)** மனுதாரா்கள், எதிா்மனுதாரா்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளைப்பாிகாரம் கோாி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளாா்கள் என்றும், எதிா்மனுதாரா்கள் அசல்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிா்வழக்குரையில் வழக்குச்சொத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கவிருப்பதாக தொிவித்துள்ளனா். வழக்குரைச்சொத்தானது 03.06.1946ம்தேதிய பதிவு கிரைய பத்திரத்தின் போில் காமாட்சிபிள்ளை குமாரா்கள் வில்லாயுதம்பிள்ளை, முத்துவில்லாயுதம்பிள்ளை, சக்கையாபிள்ளை, மாணிக்கவாசகம்பிள்ளை ஆகியோா்கள் சோ்ந்து கிரையம் பெற்று தங்கள் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்துவரும் சொத்தில் வீடுகள் கட்டி குடியிருந்தும், ஆடு, மாடு போன்றவை வளா்ப்பதற்கு தகுந்தபடி ஷெட் அமைத்து அனுபவித்து வந்தும் பின்பு அவரா்களது வாாிசுகளாகிய மனுதாரா்கள் வாக்கரலாக பாகப்பிாிவினை செய்து அனுபவித்து வரும் நிலையில் எதிா்மனுதாரா்கள் வழக்குச்சொத்து காலியிடமாக இருப்பதுபோன்று எதிா்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கு ஆட்சேபணை செய்து தாவாச்சொத்தின் அமைப்புகளை சா்வேயா் உதவியுடன் அளந்து பாா்வையிட்டு வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய நீதிமன்றம் ஆணையரை நியமனம் செய்யக்கோாி மனுதாக்கல் செய்து நிலுவையில் உள்ளபோது எதிா்வழக்குரையில் தாவாச்சொத்தானது யூ.டி.ஆா், அ பதிவேட்டில் புலஎண்.344/14ல் கட்டுப்பட்ட சொத்தானது களம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. புலஎண்.344/14 என்ற சப்டிவிசன்படி நம்பரை மாற்றி தற்போது நத்தம் இடமாக வகைப்பாடு செய்து புதிய நத்தம் சா்வே எண்.670/1ல் 0.37.5 ஏா்ஸ் நிலமானது களம் என்று தாக்கலாகி உள்ளது தொிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மூன்று நிலப்பதிவேடுகளிலும் சா்க்காா் புறம்போக்கு நிலம் என்று தாக்கலாகியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. ஷை மூன்று ஆவணங்களின் உண்மை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக்கோாி Notice to Produce document என்ற மெமோ தாக்கல்செய்யப்பட்டிருந்ததில் அது சம்பந்தாக எதிா்மனுதாரா்கள் கடந்த 06.01.2021ம்தேதி கொடுக்கப்பட்ட மெமோவில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி விசாரணையின்போது சமா்ப்பிக்கப்படும் என்பதை சொல்லி மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 1ம்எதிா்மனுதாரரான வட்டாட்சியாிடம் ஆவணங்களின்

சான்றிட்ட உண்மை நகல் கொடுக்க கோரி நேரடியாகவும் RPAD மூலமாகவும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின்படி மனுக்கொடுத்தும் இதுநாள்வரை சான்றிட்ட உண்மை நகல் கொடுக்காமல் இருந்துவருகிறார்கள் என்றும், மேற்படி ஆவணங்கள் பொது ஆவணங்கள் என்றும் அதனை கொடுக்க மறுப்பது சட்டப்படி சரியானதல்ல என்றும், எனவே ஷை மூன்று ஆவணங்களை எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல்போனால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்பதால் இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளார்கள்.

3) <u>**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.**</u>

எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள்அனைத்தும் உண்மைக்குப்புறம்பானது என்றும், வழக்குரைச்சொத்தினைப்பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப்பரிகாரம் கோரி வழக்குதாக்கல் செய்துள்ளனர் என்றும், மனுதாரர்களுக்கு மனுச்சொத்தானது சட்டப்படியான பாத்தியமும், உரிமையும் ஒருபோதும் இல்லை என்றும், மனுச்சொத்து அரசுக்கு சொந்தமான இடம் என்றும் அரசின் அனுபவ உரிமையில் இருந்து வருகிறதென்றும், வழக்குரைச்சொத்து சம்பந்தமாக எதிர்மனுதாரர்கள் வாதிகளிடம் உள்ள செட்டில்மெண்ட் "அ" ரெஜிஸ்தர் சான்றிட்ட நகல், Updating Register–க்கான சான்று நகல், நத்தம் நிலவரித்திட்ட தூய பதிவேட்டின் சான்று நகல் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமென்று எதிர்மனுதாரர்களை கட்டாயப்படுத்த முடியாது என்றும், மனுதாரர்கள் வழக்கினை நிரூபணம் செய்ய தங்களிடம் உள்ள ஆவணங்களை வைத்தே வழக்கின் தன்மையினை நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்களின் எதிர்வாதத்தை நீதிமன்ற விசாரணையின்போது சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்வார்கள் என்றும், மனுதாரர்கள் மேற்படி விபரத்தை நன்கு தெரிந்துகொண்டு எதிர்மனுதாரர்களை அலைக்கழிக்கும் நோக்கத்துடன் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனுவை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

**மனுதாரா்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?**

**4)** இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இம்மனுவை மனுதாரா்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் கூறப்பட்டு தாக்கல் செய்யும் ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதிக்கவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளாா்கள்.

**பிரச்சனைக்கான தீா்வு**

**5)** மனுதாரா்கள், எதிா்மனுதாரா்கள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளைப்பாிகாரம் கோாி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளாா்கள் என்றும், எதிா்மனுதாரா்கள் அசல்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிா்வழக்குரையில் வழக்குச்சொத்தில் விளையாட்டு மைதானம் அமைக்கவிருப்பதாக தொிவித்துள்ளனா். வழக்குரைச்சொத்தானது 03.06.1946 ம்தேதி பதிவு கிரைய பத்திரத்தின் போில் காமாட்சிபிள்ளை குமாரா்கள் வில்லாயுதம்பிள்ளை, முத்துவில்லாயுதம்பிள்ளை, சக்கையாபிள்ளை, மாணிக்கவாசகம்பிள்ளை ஆகியோா்கள் சோ்ந்து கிரையம் பெற்று தங்கள் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வந்து பின்பு மேற்படி நான்கு நபா்களின் வாாிசுகளாகிய மனுதாரா்கள் வாக்கரலாக பாகப்பிாிவினை செய்து அனுபவித்து வரும் நிலையில் எதிா்மனுதாரா்கள் வழக்குச்சொத்து காலியிடமாக இருப்பதுபோன்று எதிா்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கு ஆட்சேபணை செய்து தாவாச்சொத்தின் அமைப்புகளை சா்வேயா் உதவியுடன் அளந்து பாா்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய மனுதாக்கல் செய்துள்ள நிலையில் தாவாச்சொத்தானது யூ.டி.ஆா், "அ" பதிவேட்டில் புலஎண்.344/14 ல் கட்டுப்பட்ட சொத்தானது களம் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. புலஎண்.344/14 என்ற சப்டிவிசன்படி நம்பரை மாற்றி தற்போது நத்தம் இடமாக வகைப்பாடு செய்து புதிய நத்தம் சா்வே எண்.670/1 ல் 0.37.5 ஏா்ஸ் நிலமானது களம் என்று தாக்கலாகி உள்ளது தொிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி மூன்று நிலப்பதிவேடுகளிலும் சா்க்காா் புறம்போக்கு நிலம் என்று தாக்கலாகியுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது. ஷை மூன்று ஆவணங்களின் உண்மை நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக்கோாி Notice to Produce document என்ற மெமோ தாக்கல் செய்யப்பட்டிருந்ததில் அது சம்பந்தாக எதிா்மனுதாரா்கள் கடந்த 06.01.2021 ம்தேதி கொடுக்கப்பட்ட மெமோவில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி

விசாரணையின்போது சமா்ப்பிக்கப்படும் என்று சொல்லி மெமோ தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே 1ம்எதிா்மனுதாரரான வட்டாட்சியாிடம் ஆவணங்களின் சான்றிட்ட உண்மை நகல் கொடுக்ககோாி நேரடியாகவும் RPAD மூலமாகவும் தகவல் அறியும் உாிமைச்சட்டத்தின்படி மனுக்கொடுத்தும் இதுநாள்வரை சான்றிட்ட உண்மை நகல் கொடுக்காமல் இருந்துவருகிறாா்கள். எனவே ஷை மூன்று ஆவணங்களை எதிா்மனுதாராா்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்படி இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகக்கூறியுள்ளாா்கள்.

**6)** மனுதாராா்களுக்கு மனுச்சொத்தானது சட்டப்படியான பாத்தியமும், உாிமையும் ஒருபோதும் இல்லை அது அரசுக்கு சொந்தமான இடம் என்றும், செட்டில்மெண்ட் "அ" ரெஜிஸ்தா் சான்றிட்ட நகல், Updating Register–க்கான சான்று நகல், நத்தம் நிலவாித்திட்ட தூய பதிவேட்டின் சான்று நகல் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவேண்டுமென்று எதிா்மனுதாராா்களை கட்டாயப்படுத்த முடியாது. மனுதாராா்கள் தாங்கள் வைத்துள்ள ஆவணங்களை வைத்தே வழக்கின் தன்மையினை நிரூபணம் செய்ய வேண்டும் என்றும், எதிா்மனுதாராா்களின் நீதிமன்ற விசாரணை சமயத்தில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபணம் செய்வாா்கள் என்று ஆட்சேபணை தொிவிக்கப்பட்டுள்ளது.

**7)** எனவே மனுதாராா்கள் கூறுவதுபோல் மனுச்சொத்தானது மனுதாராா்களின் முன்னோா்களுக்கு பாத்தியப்பட்டு அவரது வாாிசுகளான மனுதாராா்களின் அனுபவித்தில் இருந்து வருகிறதா என்பதை எதிா்மனுதாராா்கள் தரப்பில் செட்டில்மெண்ட் "அ" ரெஜிஸ்தா் சான்றிட்ட நகல், Updating Register–க்கான சான்று நகல், நத்தம் நிலவாித்திட்ட தூய பதிவேட்டின் சான்று நகல் ஆகியவற்றை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானதாக உள்ளது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்படி மூன்று ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை தாக்கல் செய்வதன் மூலமாக எதிா்மனுதாராா்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படத்தக்கதாக இல்லை என்றும் இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு அனுமதிக்கதக்கதாக உள்ளது என்று இந்த நீதிமன்றம் தீர்வுகாண்கிறது.

**8) இறுதியாக**

| | |
|---|---|
| 1 | இடைநிலை மனு எண் 6/2021 அனுமதிக்கப்படுகிறது. |
| 2 | செலவுத்தொகை இல்லை. |

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின் 2022 ம் ஆண்டு நவம்பா் மாதம் 23–ம் நாள் இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

A SARAVANA SENTHIL KUMAR

Digitally signed by A SARAVANA SENTHIL KUMAR
Date: 2022.11.23 17:57:37 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),
போடிநாயக்கனூா்.